# *7*

# "இந்த எண்ணப்போக்கைக் கொண்டிருங்கள்"

## (பிலிப்பியர் 2:5-11)

*நமது வேதபாடப் பகுதியில், புதிய ஏற்பாட்டின் மாபெரும் அறைகூவல்களில் ஒன்று - மற்றும் மாபெரும் உபதேசப் பகுதிகளில் ஒன்று - அடங்கியுள்ளது. இயேசுவில் இருந்த சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது அறைகூவலாக உள்ளது: "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5). "சிந்தையே ... இருக்கக் கடவது" என்பது, "நினைக்க" அல்லது "ஒரு கருத்தை வடிவமைத்தல் அல்லது பற்றிக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படும்* phroneite *என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*[1] KJV *வேதாகமத்தில்* "Let this mind be in you, which was also in Christ Jesus" [*இதுவே தமிழ் வேதாகமத்தில், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது*] *என்றுள்ளது. வெய்மவுத் என்பவர் இந்தச் சொற்றொடரை, "கிறிஸ்து இயேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று தரவழைத்தார்.*

*பிலிப்பியர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்று பவுல் வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தார் (2:1, 2). தன்னைப் பற்றியல்ல, ஆனால் மற்றவர்களைப் பற்றி நினைத்தலே ஐக்கியத்திற்கான ஒரு திறவுகோல் என்று அவர் வலியுறுத்தியிருந்தார் (வசனங்கள் 3, 4).*

> *சுயநலமான கண், தற்பெருமையுள்ள சிந்தை, பாராட்டுகளுக்காகப் பசியாயிருக்கும் காது, ஏதொன்றையும் பேசாத வாய், மற்றவர்களுக்குக் கொஞ்சம் இடமே கொண்டுள்ள இருதயம் மற்றும் சுயத்திற்கு மாத்திரமே சேவை செய்த கை ஆகியவற்றைக் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஏற்பில்லாதவைகளாக நினைத்தார்.*[2]

*அவர் தமது வாசகர்கள், உண்மையான சுயநலமின்மை எதைக் கொண்டுள்ளது என்று புரிந்து உணர உதவுவதற்காக, திட்டவட்டமான உதாரணத்தைச் சுட்டிக்காண்பித்தார்: இயேசு (வசனங்கள் 5-8). செயல்விளைவில் பவுல், "நீங்கள் கர்த்தருடைய இருதயத்தின் மனநிலையைத் கொண்டிருந்தால், நீங்கள் ஐக்கியமாயிருப்பீர்கள்; நீங்கள் சமாதானத்தையும் இசைவிணக்கத்தையும் மகிழ்வுடன் அனுபவிப்பீர்கள் என்று கூறினார். பிலிப்பியர்களுக்குத் தரப்பட்ட அறைகூவல் நமக்கும் தரப்பட்டதாக உள்ளது: கிறிஸ்து கொண்டிருந்த அதே எண்ணப்போக்கே நமக்கும் அவசியமாக உள்ளது. நம்மில் சிலர், இயேசுவின் சிந்தையைக் கொண்டிராததால், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் (காண்க 1 பேதுரு 2:21) கடினமான வேளைகளைக் கொண்டிருக்கிறோம்.*

5ம் வசனத்தின் அறைகூவல், 6முதல் 11வரை உள்ள வசனங்களில் மாபெரும் செய்தியினால் பின்தொடரப்படுகிறது. இவ்வசனங்கள் இயேசுவைப் பற்றி ஏற்படுத்தப் பட்டவற்றிலேயே மிகவும் தனிச் சிறப்பான கூற்றுகளில் ஒன்றைக் கொண்டுள்ளது. ஜெரால்டு ஹாவ்தார்ன் என்பவர், இவ்வசனப் பகுதியைப் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்திலேயே "மிகவும் முக்கியமான பகுதி" என்று அழைத்தார் மற்றும் இதை அவர், "புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பற்றிய விபரத்தின் இணையற்ற வைரம்" என்று அறிவித்தார்.[3]

பிலிப்பியர் 2:6-11 வசனப் பகுதியானது தொடக்ககால ஞானப்பாடலாக உள்ளது என்று பலர் நம்புகின்றனர். இது, "கிறிஸ்துவைப் பற்றிய கீதம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இவ்வசனப் பகுதி இயல்பாகவே இருபகுதிகளாகப் பிரிகிறது: கிறிஸ்துவின் தாழ்மை (வசனம் 6-8) மற்றும் கிறிஸ்துவின் மேன்மை (வசனம் 9-11). முதல் பகுதி, கிறிஸ்துவின் எண்ணப்போக்கைக் கொண்டிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று விவரிக்கிறது; இரண்டாவது பகுதி, அப்படிப்பட்ட எண்ணப்போக்கைக் கொண்டிருத்தல் ஏன் முக்கியமானதாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கிறது.

எச்சரிக்கப்பட்டவர்களாக இருங்கள்: இது பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் மிகவும் முக்கியமான வசனப்பகுதியாக மாத்திரமல்ல, ஆனால் மிகவும் வாதத்திற்கு இடமான வசனப் பகுதியாகவும் உள்ளது. ஒரு எழுத்தாளர், "மாணவரைப் பெருவருத்தத்தினால் நிரப்பி புத்திக்கூர்மையின் செயலற்ற தன்மையினால் அவரை வாதிக்கப் போதுமான அளவுக்கு இவ்வசனத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் விளக்கம் தருபவர்கள் மத்தியில் மேலோங்கியுள்ளன" என்று குறிப்பிட்டார்.[4] விளக்கவுரையாளர்கள், "ரூபம்," "கொள்ளையாடின பொருள்," "வெறுமையாக்கி" மற்றும் பலவாறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகளின் அர்த்தம் பற்றிப் போராடுகின்றனர். வார்த்தைகளின் *அர்த்தம் பற்றி* விவாதம் இருந்தபோதிலும், இவ்வசனப் பகுதியின் *செய்திபற்றிச்* சிறிதளவே வாதம் உள்ளது: இயேசு பரலோகத்தை விட்டு இறங்கி வந்து நமக்காக மரிக்கும் அளவுக்கு நம்மீது அன்புகூர்ந்தார்!

இவ்வசனங்களினூடே நாம் கடந்து செல்லுகையில், இயன்ற வரையில் புரிந்துகொள்ளப்படக் கூடியவனாகவும் வாதம் இல்லாதவனாகவும் இருக்க நான் முயற்சி செய்வேன். இருந்தபோதிலும் நான், கிரேக்க வசனப் பகுதியின் மீது வழக்கத்திற்கு மாறாக அதிக நேரம் செலவிடுவேன் - மற்றும் நீங்களும் தீவிரமான சிந்தனை செய்ய வேண்டியிருக்கலாம். நீங்கள் உங்கள் சிந்தையை நீட்சியடையச் செய்வதற்கு எதிரானவர்களாக இருந்தால், நீங்கள் அடுத்த பாடத்திற்குக் கடந்து செல்லலாம் - ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் அவ்வாறு செய்தால், இயேசுவைப் பற்றி வேதாகமத்தில் உள்ள மிகவும் முக்கியமான போதனைகளில் சிலவற்றை நீங்கள் இழந்து போவீர்கள்.

## கிறிஸ்துவின் சிந்தை வெளிப்படுத்தப்பட்டது (2:6-8)

### சுயநலமற்றிருத்தல் & சுயத்தை வெறுமையாக்குதல்

"கிறிஸ்துவைப் பற்றிய கீதம்" இயேசு பரலோகத்தில் முன்னிருந்த நிலை

பற்றிய விபரத்துடன் தொடங்குகிறது: "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்" (வசனம் 6அ). அதாவது, இயேசு பூமிக்கு வருவதற்கு முன்னர், அவர் பரலோகத்தில் தேவனுடன் இருந்தார். அவரது முன்னிருந்த நிலை பற்றி எடுத்துரைக்கும் மற்ற வசனப்பகுதிகளில், யோவான் 1:1, 2; 17:5; 2 கொரிந்தியர் 8:9; கொலோசெயர் 1:15-17; எபிரெயர் 1:2, 3அ ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன. "ரூபம்" என்பதற்கு நமது வசனப் பகுதியில் பின்வரும் இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன: *morphe* (வசனங்கள் 6, 7) மற்றும் *schema* ("சாயல்"; வசனங்கள் 7, 8). இந்த வார்த்தைகளைக் கிரேக்கர்கள், ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாக அடிக்கடி பயன்படுத்தினர், ஆனால் இவைகள் நமது வேதவசனப் பகுதியில் நேர்மாறானவைகள் ஆக்கப்பட்டுள்ளன. சந்தர்ப்பப் பொருளில், *morphe* என்பது ஒரு நபர் அல்லது பொருளின் மாறாதிருக்கும் அத்தியாவசியமான இயல்பைக் குறிக்கையில், *schema* என்பது மாறக்கூடிய மற்றும் மாறுகிற வெளிப்புற தோற்றத்தைத் குறிக்கிறது.[5] ரிச்சர்டு கேஃபின் என்பவர், "தேவனுடைய ரூபம்" என்பது "தேவனைத் தேவானக்குகிற அந்தப் பண்புகளின் மொத்தம்" என்று எழுதினார்.[6] Phillips, Goodspeed, and Moffatt ஆகியோர் மற்றும் NEB உட்பட பல மொழிபெயர்ப்பாளர்கள், "தேவனுடைய இயல்பு" அல்லது "தெய்வீக இயல்பு" அல்லது அதைப்போன்ற சிலவற்றைக் கொண்டுள்ளனர். NCV வேதாகமம், "ஒவ்வொரு விஷயத்திலும் கிறிஸ்து தாமே தேவனைப் போன்றிருந்தார்" என்று கூறுகிறது. மேலும் பவுல், இயேசு "தேவனுக்குச் சமமாக இருப்பதை" உடைமையாகக் கொண்டிருந்தார் என்றும் உறுதிப்படுத்தினார் (வசனம் 6ஆ). 6ம் வசனத்தின் வார்த்தை அமைப்பானது, இயேசு மெய்யாகவே மற்றும் உண்மையாகவே தேவனாக இருந்தார் என்பதை உறுதிப்படுத்தும், அப்போஸ்தலருடைய வழியாக இருந்தது!

"தேவனுடைய ரூபமாக" இருத்தல், பரலோகத்தில் தேவனுக்குச் சமமாயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்று ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். கிறிஸ்துவின் மீது பொழிந்தருளப்பட்டிருந்த கனத்தை, அவர் பெற்றிருந்த வந்தனையை மற்றும் அவர் மகிழ்வுடன் அனுபவித்த ஆச்சரியமான விஷயங்களைக் கற்பனை செய்ய முயலுங்கள். யோவான் 17ல் இயேசு தமது பிதாவினிடத்தில் ஜெபித்த ஜெபத்தில் அவர், "உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை" பற்றிக் குறிப்பிட்டார் (வசனம் 5). கர்த்தர் எதை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ளும் வரையில், அவரது சுயநலமின்மையை நம்மால் ஒருக்காலும் முற்றிலுமாக உணர்ந்தறிய இயலாது.

கிறிஸ்து "தேவனுடைய ரூபமாக" இருத்தலின் ஆசிர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவித்து இருந்தாலும், அவர் "தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" இருந்தார். மூல மொழியில், "கொள்ளையாடின பொருள்" என்பது *harpagmon* என்ற கிரேக்கப் பெயர்ச் சொல்லாக உள்ளது. இது "பிடித்துக் கொள்ளுதல் … ; வலிமையினால் எடுத்துக் கொள்ளுதல், பிடுங்கிச் செல்லுதல்" என்று அர்த்தப்படுகிற *harpazo* என்ற வினைச்சொல்லில் இருந்து தரவழைக்கப்பட்டது.[7] *Harpagmon* என்பது "பேராவலுடன் பிடித்துக் கொள்ளும் குணத்தைக் கொண்டு தக்க வைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஒரு பொருள்" என்பதைக் குறிக்கக் கூடும்.[8] இயேசு, பரலோக மகிமை என்ற தமது நிலையை "இறுக்கமாகப் பற்றிக்கொண்டு"

இருக்கவில்லை என்பதே இவ்வசனப்பகுதியின் அர்த்தம் என்று நான் நம்புகிறேன். J. B. லைட்ஃபூட் என்பவரின் கூற்றுப்படி, "இது, கிரேக்க மொழியின் நிபந்தனைகளினுடைய மிகவும் உயிர்த்துடிப்பான கருத்துணர்வைக் கொண்டிருந்த கிரேக்க முற்பிதாக்களின் பொதுவான மற்றும் ஏறக்குறைய உலகளாவியதான விளக்கமாகும்."[9]

பசியாயிருக்கும் ஒரு நாய்க்கு ஒரு எலும்பைக் கொடுத்தல் என்ற விவரிப்பைப் பிரசங்கியார்கள் பயன்படுத்தி இருக்கின்றனர். அந்த நாய் எலும்பைத் தனது எல்லாப் பலத்துடனும் பற்றிக் கொள்ளும். நீங்கள் அதனிடத்தில் இருந்து அந்த எலும்பை எடுக்க [பிடுங்க] முயற்சி செய்தால், நீங்கள் அதைப்பிடித்து இழுத்தாலும், அந்த நாய் அதைத் தளரவிடாது. ஏன்? அது எலும்பை இழந்து விடுவோமோ என்று அஞ்சுகிறது! இயேசு அதைப் போன்று இருக்கவில்லை. கிறிஸ்து, தமது பரலோக அந்தஸ்தை "பற்றிக்கொண்டு" இருப்பதற்குப் பதிலாக, இந்த பூமிக்கு வந்து நமக்காக மரிக்கக் கூடும்படி அவர் அதை "தளர்வாக விட" மனவிருப்பமாயிருந்தார். சமீபத்திய நாட்களில், இந்தக் கருத்தின் மாறுநிலை ஒன்று பிரபலமாகியுள்ளது: இயேசு, "தேவனுக்குச் சமமாயிருத்தல் என்பது *தமது சொந்த அனுகூலத்திற்காகப்* பற்றிக் கொண்டிருக்க வேண்டிய விஷயம் என்று நினைக்கவில்லை." கர்த்தருடைய சுயநலமின்மையைப் பற்றி நாம் வாசிக்கையில், நமது சொந்த வாழ்வில் இதற்கு நாம் ஒரு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துதல் அவசியமாக உள்ளது. "தேவனுக்கும் மனிதருக்கும் இன்னமும் சிறப்பாக ஊழியம் செய்வதற்காக, தளர்வாக விட வேண்டிய ஏதாவது ஒரு விஷயத்தை நான் பற்றிக் கொண்டு, இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறேனா?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

"ஆனால்" தமது பரலோக பதவியைப் பற்றிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, இயேசு, "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (வசனம் 7). "தம்மைத்தாமே வெறுமையாக்கி" என்ற சொற்றொடர் கல்வியாளர்களை வசப்படுத்தியுள்ளது. "அவர் *எதிலே* தம்மை வெறுமையாக்கினார்?" என்ற கேள்வியின் மீது சொற்போர் சீறி எழுந்துள்ளது. "வெறுமையாக்குதல்" என்பதற்கான (*kenos* என்ற) கிரேக்க வார்த்தையானது, இயேசு பூமிக்கு வந்தபோது, அவர்தமது அடிப்படைத் தெய்வீகத்தை (தமது தெய்வீகப் பண்புகளில் எல்லாவற்றையும் அல்லது பெரும்பான்மையை) "தம்மையே வெறுமையாக்கி" என்று போதிக்கும், திருஅவதாரத்தின் "kenotic" கோட்பாடு என்று அழைக்கப்படும் கோட்பாட்டை எழுப்பித் தந்துள்ளது. இந்த நிலைப்பாடு, "தம்மையே வெறுமையாக்கி" என்ற வார்த்தைகளில் இல்லாத சிலவற்றை அதில் வாசிக்கிறது மற்றும் இது, பூமியின் மீது இயேசு இருக்கையில் அவர் அப்போதும் தேவனாகவே இருந்தார் என்று வேறு இடங்களில் போதிக்கும் தெளிவான வசனப் பகுதிகளுக்கு நேர்மாறானதாக உள்ளது.

தேவன் "மாம்சமாகி, ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்று யோவான் அறிவித்தார் (யோவான் 1:1, 14). யோசேப்பினிடம் தூதன், இயேசு, "இம்மானுவேல்" என்று அழைக்கப்படுவார் என்று கூறினார், இதை மொழிபெயர்க்கும்போது, "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தப்படுகிறது (மத்தேயு 1:23). தோமா, கிறிஸ்துவை "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று அழைத்தார் (யோவான் 20:28). திருஅவதாரப் போதனையானது, இயேசு முழுமையாக மனிதனாக இருந்தார் ஆனால் முழுமையாகத் தேவனாகவும்

இருந்தார் என்று அறிவிக்கிறது. இயேசு இந்த பூமிக்கு வந்தபோது, அவர் சிலவற்றை (மனிதத்துவத்தை) எடுத்துக் கொண்ட அளவிற்கு, அவர் சிலவற்றை (தேவத்துவத்தை) விட்டுவிட வில்லை. பவுல் ரீஸ் என்பவர் பின்வரும் விவரிப்பைப் பயன்படுத்தினார்:

> பல ஆண்டுகளுக்கு முன்பு, விண்ட்சரின் பிரபு, வேல்ஸ்ஸின் இளவரசராக இருந்தபோது, அவர் ஒருநாள், பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டு வெளியேறி, நிலக்கரிச் சுரங்க நாடு இருந்த மேற்குப் பகுதிக்குப் பயணமாகி, சுரங்கத் தொழிலாளியின் தொப்பி ஒன்றை அணிந்தவராக, பிரிட்டிஷ் தொழிற்சாலையின் கடினமான மற்றும் அபாயமான பிரிவில் கடினமாக உழைக்கும் மனிதர்களின் நிலையைத் தாமே நேரில் காண்பதற்காக, இருள்சூழ்ந்த சுரங்கப் பாதைகளுக்குள் இறங்கிச் சென்றார். ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் அவர் இலண்டனில் இருக்கும் அரண்மனையில் வாழ்ந்தபோது எப்படி ஒரு இளவரசராக இருந்தாரோ, அப்படியே அவர் நிலக்கரிச் சுரங்கத்தினுள் இருந்தபோதும், ஒரு இளவரசராகவே இருந்தார். ஆனால் அவரது ராஜரீகத்திற்கு அத்தியாவசியமான பண்பு மாறாதிருக்கையில், அனுபவத்திற்கு இணையான ஒன்று இருந்ததில்லை. அரண்மனையின் மாட்சிமை மற்றும் பிறர் தொற்றக்கூடாத தன்மை ஆகியவற்றின் மத்தியில், தம்மிடத்தில் ஒருக்காலும் வந்திராத அனுபவங்களுக்குள் பிரவேசிக்கச் சம்மதித்திருந்தார்.[10]

‘‘இயேசு எதிலே தம்மை வெறுமையாக்கினார்?’’ என்ற கேள்விக்கு நாம் திரும்புவோமாக. யூகங்கள் ஏராளமாக உள்ளன. KJV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பாளர்கள், அவர் தமது பரலோக “புகழ்ச்சியில்” தம்மை வெறுமையாக்கினார் என்று நினைத்தனர் என்பது தெளிவு. NASB வேதாகமத்தின் பக்கக் குறிப்பில், “தமது சிலாக்கியங்களைப் புறம்பே ஒதுக்கிவைத்தார்” என்றுள்ளது. J. B. லைட்ஃபூட் என்பவர், “மகிமைகளை, தெய்வீகத்தின் சிறப்புரிமைகளை” அவர் தம்மைவிட்டு உரிந்துபோட்டார் என்று எழுதினார்.[11] இயேசு தம்மிடத்தில் இருந்து அகற்றிப் போட்ட பண்புகளை இவ்வசனப் பகுதி குறிப்பிடுவதில்லை என்பதால், அதை நாம் யூகத்தினால் சிறிதளவே கண்டறிகிறோம். 7ம் வசனத்தின் பகுதியை அவ்வசனத்தின் முற்பகுதிக்கு விளக்கமாக எடுத்துக் கொள்ளுதல் சிறந்ததாயிருக்கலாம்: அவர் ‘‘அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்’’ *என்ற வகையில்* “தம்மைத்தாமே வெறுமையாக்கி”னார். CJB வேதாகமம், “அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, *அதில்* அடிமையின் ரூபமெடுத்தார்” என்று கூறுகிறது (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

## ஊழியம் செய்தல் & பரிவிரக்கப்படுதல்

7ம் வசனத்தில் உள்ள “அடிமை” என்பது, அடிமை என்பதற்கான *doulos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்த வசனத்தில் “ரூபம்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது 6ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அதே சொற்றொடராக உள்ளது. பரலோகத்தில் இயேசு, தேவனுடைய எல்லாப் பண்புகளையும் கொண்டிருந்தார்; பூமியில் அவர் ஒரு அடிமையின் எல்லாப் பண்புகளையும் எடுத்துக் கொண்டார்.

இயேசு தமது நாட்களில் இருந்த அடிமை வகுப்பில் பிறக்கவில்லை, ஆனால் அவர் தம்மையே அடிமையாக்கி, அதிலே அவர் முற்றிலும் தேவனைச் சார்ந்திருந்து அவருக்குக் கீழ்ப்படிந்தவரானார். இதன் விளைவாக, கிறிஸ்து மனிதகுலத்தின் தேவைகளுக்கும் - சிறப்பாக, இரட்சிப்பின் தேவைக்கும் அடிமையானார். இயேசுவின் அடிமைத்துவத்துவம் பற்றிக் பல வசனப்பகுதிகள் பேசுகின்றன (காண்க மத்தேயு 20:28; மாற்கு 10:45; லூக்கா 22:27); இயேசு தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவிய வேளையானது, அவர் ஒரு அடிமை/ஊழியக்காரர் என்பதற்கு மிகச்சிறப்பான விவரிப்பாக உள்ளது (யோவான் 13:5). நேர்மாறு தெளிவாக உள்ளது: இயேசு, ஒரு அடிமையாக (கற்பனை செய்ய மிக தாழ்ந்த நிலையில்) இருப்பதற்காக, தேவனுக்குச் சமமாயிருப்பதை (கற்பனை செய்ய மிக உயர்ந்த தகுதிநிலையை) விட்டுச் சென்றிருந்தார். 2 கொரிந்தியர் 8:9ல் உள்ள பவுலின் வார்த்தைகள் நமக்கு நினைவூட்டப்படுகின்றன: "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."

கிறிஸ்துவின் கீழ்நோக்கிய பயணமானது, அவர் "மனுஷர் சாயலான"தைக் கொண்டு தொடங்கிற்று (பிலிப்பியர் 2:7ஆ). முதல் நூற்றாண்டின் முடிவிற்கு முன்னர், இயேசு மனிதர்களைப் "போல" இருந்தார், ஆனால் உண்மையில் அவர் மனிதராக இருக்கவில்லை என்று போதிப்பதற்குச் சிலர், "சாயலாகுதல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்த முயற்சி செய்தனர். அந்த வகையான தவறான சிந்தைனையை, யோவான், இயேசு "*மாம்சமானார்*" (யோவான் 1:14; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறியபோதும், "*மாம்சத்தில் வந்த* இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது" என்று எழுதியபோதும் (1 யோவான் 4:2; என்னால் வலியுறுத்தப்படுகிறது) எதிர்த்து நின்றார். இயேசுவின் மனிதத்துவம் என்பது மாயத்தோற்றமல்ல, ஆனால் உண்மை நிலையாக இருந்தது என்று பல வசனப் பகுதிகள் வலியுறுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், அவர் "*எவ்விதத்திலும்* தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது" என்று கூறினார் (எபிரெயர் 2:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது). எபிரெயர் 2:17ல் "ஒப்பாகவேண்டியிருந்தது" என்பது பிலிப்பியர் 2:7ல் "சாயலானார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2:7ல் பவுல், "சாயலானார்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது ஏன் என்று நம்மால் உறுதியாகக் கூற இயலாது. ஒருவகையில், இயேசு முற்றிலும் மனிதராக இருந்ததால், அவர் மற்ற மனிதர்களைப் "போல்" இருந்தார் என்பதே இங்கு வலியுறுத்தம் என்று சிலர் நினைக்கின்றனர், ஆனால் இன்னொரு வகையில், அவர் முற்றிலும் தேவனாகவும் இருந்தபடியால், அவர் அவர்களைப் "போல்" இருக்கவில்லை. இங்கு ஒரு எளிய விளக்கம் தரப்படுகிறது: 7ம் வசனத்தில் ஆங்கில வேதாகமத்தில் "being made" (Gk.: *ginomai*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை [இது தமிழில் "ஆனார்" என்றுள்ளது] "பிறந்திருக்க" என்று அர்த்தப்பட முடியும்.[12] RSV வேதாகமத்தில், "மனிதரின் சாயலில் பிறந்தவராயிருந்தார்" என்றுள்ளது. "மனுஷசாயாலானார்" என்ற சொற்றொடர், அனேகமாக இந்த உலகில் இயேசு பிரவேசித்ததைக் குறிக்கலாம்: அவர் மனிதப் பிறவிகளான நம் எல்லோரைப் போலவும் பிறந்தார்.

7ம் வசனத்தில், மனிதரிடத்தில் இருந்து இயேசுவின் வேறுபாடு அல்ல, ஆனால் அவர்களுடன் அவருக்கு உள்ள ஒற்றுமைத் தன்மையே வலியுறுத்தப்படுகிறது. கிறிஸ்து ஒரு தூதரின் "சாயலில்" வந்திருக்க முடியும், அப்படி வந்திருந்தால் மனிதகுலம் அவரைப் பார்த்து வியந்திருக்கும். அவர் தேவனுடைய சாயலில் வந்திருக்க முடியும், அப்படி வந்திருந்தால் மனிதகுலம் அவரை ஆராதித்திருக்கும். இருப்பினும் அவர் தமது ஊழியத்தை நிறைவேற்ற வேண்டி இருந்ததென்றால், அவர் மனித "சாயலாக" வரவேண்டியவராக இருந்தார் (காண்க ரோமர் 8:3). இயேசு நம்மைப் போலாக்கப்பட்டதால், அவர் நமக்காகப் பரிதபித்து நமக்கு உதவ முடியும் (காண்க எபிரெயர் 2:17, 18; 4:15, 16). மிக முக்கியமாக, அவர் நமக்காக மரிக்க முடிந்தது (1 கொரிந்தியர் 15:3).

நாம் மரிக்க வேண்டிய இடத்தில், நமக்காக இயேசு மரிப்பதற்கு முன்னர், அவர் மாம்சமாக வேண்டியிருந்தது ஏன்? ஒரு எழுத்தாளர், சேற்றில் விழுந்த ஒருவரைத் தூக்கி எடுக்கச் சென்ற ஒரு மனிதர், அவ்வாறு அவரை இழுத்து விடுவதற்கு முன்னர், அவரே சேற்றில் இறங்கிய அல்லது தண்ணீருக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதரைக் காப்பாற்றக் கூடும்படிக்கு தண்ணீருக்குள் இறங்கிய ஒரு மனிதரின் விவரிப்பைக் கருத்தாகத் தெரிவித்தார்[13]-ஆனால் எந்த விவரிப்பும் போதுமானதாக இருப்பதில்லை. இயேசு "மனித சாயலில்" வர வேண்டியிருந்தது ஏன் அவசியமாக இருந்தது என்று நாம் ஒருக்காலும் முற்றிலுமாக அறிய இயலாது; ஆனால் வேதாகமம் அதையே போதிக்கிறது, நாம் விசுவாசத்தில் அதை ஏற்றுக்கொள்கிறோம்.

மனிதகுலத்துடன் கிறிஸ்து அடையாளப்படுத்தப்படுதல் 8ம் வசனத்தில் தொடர்கிறது. அவ்வசனம், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு" என்று தொடங்குகிறது. "ரூபம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*schema* என்ற) கிரேக்க வார்த்தையானது, நமது வேதவசனப்பகுதியில் "சாயல்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாவது வார்த்தையாக உள்ளது. முன்பே குறிப்பிட்டபடி, இவ்வார்த்தை "மாறக்கூடிய மற்றும் மாறுகிற வெளித்தோற்றத்தை" குறிக்கிறது. இயேசுவின் அத்தியாவசிய இயல்பு (*morphe*) ஒருக்காலும் மாறவில்லை, ஆனால் அவர் பச்சிளம் குழந்தைப் பிராயத்தில் இருந்து பிள்ளைப் பருவத்திற்கும் பின்பு முழுமனிதநிலைக்கும் வளருகையில், அவரது தோற்றம் (*schema*) மாறியது. கிறிஸ்து, மனிதர்கள் மத்தியில் ஒரு மனிதராக நடக்கையில் - மனிதராக இருத்தலின் வேதனை மற்றும் துக்கத்தை அவர் தழுவிக்கொள்கையில் அவரது வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றைப் பற்றி நாம் நினைவூட்டப்படுகிறோம் (காண்க ஏசாயா 53:3).

இயேசு இந்த பூமிக்கு வருவதற்கு எதை விட்டுக் கொடுத்தார் என்பதைப் பற்றி மீண்டும் ஒருமுறை சிந்திக்க, நான் சற்றே தாமதிக்கிறேன். நான் எனது மனதில், இரு இணைகருத்துக்களைத் தரவழைக்க முயற்சி செய்கிறேன்: உலகப் புகழ்பெற்ற ஒரு ஓட்டப்பந்தய வீரர் தமது கால்களை இழந்து போகுதல் என்பது அவருக்கு எதை அர்த்தப்படுத்தும்? வரைபடக் கலைஞர் ஒருவர் தமது கண்களைப் பயன்படுத்துதலை இழந்து போகுதல் என்பது அவருக்கு எதை அர்த்தப்படுத்தும்? நம்மில் எவரேனும் நமது கைகள் மற்றும் கால்களைப் பயன்படுத்த முடியாமல் போகும் முடக்கு வாதக்காரரானால் அது நமக்கு எதை அர்த்தப்படுத்தும்? நான் இந்தக் கேள்விகளைக் கேட்கும்போதேகூட, எந்த ஒப்பீடும் போதுமானதல்ல என்பதை வருத்தம் நிறைந்த வகையில் உணர்ந்து

அறிகிறேன். ஒருவர், பரலோகத்தின் மகிமைகளை மகிழ்வுடன் அனுபவித்திருந்து, பின்பு திடீரென்று அவர் பலவீனத்திலும் மனிதகுலத்தின் மோசம்போக்கும் மாம்சத்திலும் பொதியப்பட்டு இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்தும் என்று என்னால் புரிந்துகொள்ளத் தொடங்க இயலவில்லை. தேவன் எனக்காக அப்படிப்பட்ட ஒரு தியாகத்தைச் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தார் என்பதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்த மாத்திரமே முடிகிறது!

*என் மீட்பர் பூமிக்கு ஏன் வந்தார்,*
*தாழ்வான வாழ்வை ஏன் ஏற்றார்?*
*கீழான பிறப்பை ஏன் தேர்ந்தார்?*
*ஏனெனில் என்னை அவர் நேசித்தார்!*

*வருத்தம் வேதனை சாபமென்னும்*
*பாத்திரத்தில் அவர் ஏன் அருந்தினார்?*
*சிலுவையில் அவர் ஏன் ஏற்றப்பட்டார்?*
*ஏனெனில் என்னை அவர் நேசித்தார்!*[14]

## கீழ்ப்படிதல் & தியாகம்

"மனித ரூபமாய்க் காணப்பட்டது" கிறிஸ்துவின் மலையிறக்கப் பயணத்தின் முடிவாக இருக்கவில்லை. அவர் இன்னும் கல்வாரியின் சாலையில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:8). [மேற்குறிப்பிட்ட விளக்கங்களின்படி, இவ்வசனத்தில் "மனுஷரூபமாய்" என்பதற்குப் பதில் "மனுஷசாயலாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் அதுவே சரியானதாக இருந்திருக்கும்].

இயேசு மரிக்க *வேண்டியிருக்கவில்லை*. மற்றவர்கள் - ஏனோக்கு (ஆதியாகமம் 5:24; எபிரெயர் 11:5) மற்றும் எலியா (2 இராஜாக்கள் 2:11) - மரிக்காமலேயே இந்தப் பூமியை விட்டுப் புறப்பட்டுச் சென்றிருந்தனர் - மற்றும் இயேசுவும் அவ்வாறு செய்திருக்க முடிந்திருக்கும் (காண்க யோவான் 10:18). இருப்பினும், நீங்கள் நானும் நித்திய வாழ்வின் நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டுமானால் அவர் மரிக்க வேண்டி இருந்தது (1 கொரிந்தியர் 15:3). ஆகையால் அவர் "மரணபரியந்தம்" தம்மையே தாழ்த்த மனவிருப்பம் கொண்டிருந்தார் - அதுவும் ஏதோ ஒரு மரணம் அல்ல, ஆனால் மனிதரால் கண்டுபிடிக்கக் கூடியவற்றிலேயே மிகவும் இழிவான மரணமாக இருந்தது. சிலுவையில் அறையப்பட்டு மரணம் அடையச் செய்தல் என்பது பெனிக்கேயர்கள் மற்றும் பெர்சியர்களிடத்தில் இருந்து கடனாகப் பெறப்பட்டு, ரோமர்களால் பூரணப்படுத்தப் பட்டிருந்தது. அது யூதர்களுக்கு அவமானத்தின் கருவியாக இருந்தது (உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13) மற்றும் புறஜாதியாருக்கு கனவீனம் நிறைந்த மதியீனமாக இருந்தது (1 கொரிந்தியர் 1:23). "ரோமானியர்களின் கண்ணியமிக்க சமூகத்தில், 'சிலுவை' என்ற வார்த்தை அருவருக்கத் தக்கதாக, உரையாடலில் உச்சரிக்கப்படக் கூடாததாக இருந்தது,"[15] சிலுவை என்பது "மனிதகுலத்தின் மதிப்பை இழிவுபடுத்துவதில் நிறைவானதாக இருந்தது"[16] "அது தேவனுடைய அரியணையில் இருந்து தொங்கும் ஏணியின் கடைசிப்படியாகும்."[17]

இப்படிப்பட்ட சிறுமைப்படுத்தும் மற்றும் வேதனை நிறைந்த மரணத்தை அனுபவிக்க இயேசுவை மனவிருப்பம் கொள்ளச் செய்தது எது? அவர் நம்மீது அன்புகூர்ந்தபடியால் இதைச் செய்தார் என்று ஏற்கனவே நாம் கருத்துத் தெரிவித்திருக்கிறோம் (கலாத்தியர் 2:20). பிலிப்பியர் 2:8ஆ வசனப்பகுதி இன்னொரு காரணத்தைக் கூடுதலாகத் தருகிறது: தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல். அவர் "மரணபரியந்தம் ... *கீழ்ப்படிந்தவராகி*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசு தமது சொந்த ஊழியத்தின்போது, "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்" என்று கூறினார் (யோவான் 6:38). கெத்செமெனே தோட்டத்தில் அவர், தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பாடுகளுடன் போராடினார் ஆனால் தமது ஜெபத்தை அவர் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42). கடைசியில் அவர், "மரணம் வரையிலும் - சிலுவை மீதான அவரது மரணம் வரையிலும் - கீழ்ப்படிதலின் பாதையில் நடந்தார்" (பிலிப்பியர் 2:8). இயேசு, தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால், நமக்காக நிறைவான பலியைச் செலுத்தினார்.

இயேசு சுயநலமற்றவராக, தம்மையே வெறுமையாக்கியவராக, ஊழியம் செய்பவராக, பரிதபிப்பவராக, கீழ்ப்படிபவராக மற்றும் தியாகம் செய்பவராக இருந்தார் என்பதைப் பவுல் ஏன் வலியுறுத்தினார்? அது கிறிஸ்து நம்மீது கொண்டுள்ள அன்பையும் அக்கறையையும் நாம் மதிப்பதற்கு உதவ வேண்டும் என்பதற்காக மாத்திரம்தானா? இந்தச் செய்தியானது நம்மீது இந்தச் செயல் விளைவைக் கொண்டிருக்க வேண்டும் - ஆனால் இறையியலைப் போதித்தல் என்பதல்ல, வாழ்வை மாற்றுதல் என்பதே பவுலின் நோக்கமாக இருந்தது. இசைவிணக்கம், சமாதானம் மற்றும் ஒருமைப்பாட்டைக் கொண்டிருப்பதற்குப் பிலிப்பியர்கள் இயேசுவைப் போல் இருக்க வேண்டும் என்று அவர்கள் அறிய வேண்டுமென அவர் விரும்பினார். அவர்கள், "கிறிஸ்துவினால் ஏற்கனவே மிதித்து நடக்கப்பட்ட பாதையில் மிதித்து நடப்பதற்காக" அவர்களை அவர் அழைத்தார்.[18] நாமும் கூட இயேசுவின் எண்ணப்போக்கைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பதை அறிய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார். கர்த்தருடைய சீஷர்களுக்கு அவர் விடுத்த அறைகூவலானது, உலகளாவிய அறைகூவலாக உள்ளது:

> ... உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்கு 10:43-45).

மேலும் இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னை தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (மத்தேயு 16:24). துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பலர், சிலுவை இல்லாமல் கிரீடத்தை விரும்புகிறோம் - அல்லது ஒரு

எழுத்தாளர் கூறியபடி நாம் இரத்தம் சிந்துதல் இல்லாமல் ஆசீர்வாதங்களை விரும்புகிறோம்.[19] நமது சிந்தைனைகளை வெளிப்புறமாய்த் திருப்பக் கற்றுக் கொள்ளுதல் எவ்வளவு கடினமானதாக உள்ளது!

நான் அறிந்த வரையில், மிகவும் அறைகூவல் விடுக்கும் பாடல்களின் ஒன்று "சுயம் ஒன்றுமல்ல எல்லாமும் நீரே" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாடல் பின்வருமாறு தொடங்குகிறது:

*"சுயம் ஒன்றுமல்ல எல்லாமும் நீரே" என்று*
*இயேசுவினிடத்தில் நான் பெருமையாய்க் கூறும்போது*
*கசப்பான வேதனையும் துக்கமும்,*
*கலந்துள்ள காலமாய் அது இருக்கும்.*

இதன் இரண்டாம் பத்தி "சற்றே சுயமும் சற்றே நீரும்" என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ள வேளையில், மூன்றாவது பத்தி "சுயம் குறைவாகவும் நீர் அதிகமாகவும்" என்று வளருகிறது. கடைசியில் இந்தப் பாடலின் நிறைவு வாக்கியம் பின்வருமாறு கூறுகிறது:

*மிக உயர்ந்த வானங்களிலும் உயர்ந்தது,*
*மிக ஆழ்ந்த கடலிலும் ஆழமானது,*
*கர்த்தாவே, கடைசியில் அன்பே வென்றது,*
*"சுயம் ஒன்றுமல்ல எல்லாமும் நீரே."*[20]

இந்தப் பாட்டைப் பாடுவது நம் இருதயங்களை சோதித்துப் பார்க்க நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். தன்னயமில்லாதிருத்தலின் பாதையில் நாம் எங்கு இருக்கிறோம்? கிறிஸ்துவின் எண்ணப்போக்கை எனதாக்கிக் கொள்ள, எனக்கு தேவனுடைய உதவி தேவையாயிருக்கிறது. ஒருவேளை உங்களுக்கும் அது தேவையாயிருக்கும்.

## கிறிஸ்துவின் சிந்தை பலனளிக்கப்பட்டது (2:9-11)

### உயர்த்தப்படுதல்

நாம், கிறிஸ்துவின் சிந்தை வெளிப்படுத்தப்படுதலில் இருந்து கிறிஸ்துவின் சிந்தை பலனளிக்கப்படுதலுக்குத் திரும்புகிறோம். 9ம் வசனம், "ஆதலால் [இயேசு தம்மையே தாழ்த்த மனவிருப்பமாக இருந்ததால்] தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி" என்று கூறுகிறது. இயேசு தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ளவில்லை; அடிமை ஒருவர் மற்றவரால் மட்டுமே உயர்த்தப்பட முடியும். "மேலாக உயர்த்தி" என்பது (*huperusoo* என்பதில் இருந்து வந்த *huperupsosen* என்ற) கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "மீது" அல்லது "மேலாக" (*huper*) என்ற முன்னிடைச் சொல்லுடன் "உயர்த்துதல்" என்பதற்கான (*hupsoo* என்ற) வார்த்தையை இணைத்துப் பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. *Hyper* என்பதற்கு இணையான இலத்தீன் வார்த்தை "super" என்பது ஆகும். தேவன் இயேசுவை "மேலாக உயர்த்தினார்"![21] அவர் பூமிக்கு வருவதற்குப் பரலோகத்தை விட்டுப் புறப்படும்முன் மகிழ்வுடன் அனுபவித்திருந்த அவரது உன்னதமான

நிலைக்குத் திரும்பவும் கொண்டு செல்லப்பட்டார். அவரது தாழ்மை என்பது படிப்படியான நிலைகளில் வந்தது - ஆனால் அவர் ஒரே மாபெரும் செயலில் உயர்த்தப்பட்டார்! இயேசு உயர்த்தப்படுதலில், அவரது உயிர்த்தெழுதல், அவர் பரத்துக்கேறியது மற்றும் அவர் மகிமைப்படுத்தப்படுதல் ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன - ஆனால் இவ்வசனத்தில் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் மகிமைப்படுத்தப்படுதல் மீதே வலியுறுத்தம் உள்ளது. "இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்" (மாற்கு 16:19ஆ).

பரலோகத்தில் தேவன், "எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (வசனம் 11ஆ). "மேலான" என்பது 9ம் வசனத்தில், "உயர்வான" என்பதற்கான (*huper* என்ற) முன்னிடைச் சொல்லில் இருந்து ["உயர்த்தி" என்று] மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர் மீது தந்தருளப்பட்ட நாமம் என்ன என்பது பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது. இது தற்சமயம் தேவன் மாத்திரமே அறிந்துள்ள ஒரு நாமமாக உள்ளது என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது சாத்தியமானதாக உள்ளது, ஆனால் பவுல் தமது வாசகர்களின் சிந்தைகளில் கிறிஸ்துவை உயர்த்த விருப்ப நோக்கங்கொண்டிருந்தார் என்பது தெளிவாக இருப்பதால், அப்படிப்பட்ட முடிவானது அப்போஸ்தலருடைய நோக்கத்திற்கு நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது. அடுத்த வசனம், பவுல் "இயேசுவின் நாமம்" என்பதை அர்த்தப்படுத்தினார் என்று நம்மை வழிநடத்தலாம் (வசனம் 10). பல எழுத்தாளர்கள், "நாமம்" என்ற வார்த்தை இவ்விடத்தில் "பதவிப்பெயர்" என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நினைக்கின்றனர் மற்றும் "கர்த்தர்" என்பதே அந்தப் பட்டம் என்ற கருத்தையும் அவர்களை விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர் (வசனம் 11).[22] மற்றவர்கள், 11ம் வசனத்தில் உள்ள "இயேசு கிறிஸ்து கர்த்தர்" என்ற முழுப்பட்டத்தை ஆதரிக்கின்றனர். கிரேக்க மொழி வேதாகமத்தில், "இயேசு கிறிஸ்து" மற்றும் "கர்த்தர்" ஆகியவற்றிற்கு இடையில் "இருக்கும்" என்ற வினைச் சொல் இல்லை; மூல மொழியில் [தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்றே] "இயேசு கிறிஸ்து கர்த்தர்" என்று மாத்திரமே உள்ளது. "நாமம்" என்பதை அடையாளம் கண்டறிதல் நமக்கு அவசியமற்றது; அது "எல்லா நாமத்திற்கும் மேலானது" என்பதை மட்டும் அறிதல் நமக்கு அவசியமாக உள்ளது (வசனம் 11). பூமியில் இயேசு சிறுமைப்படுத்தப்பட்டார்; பரலோகத்தில் அவர் உயர்த்தப்பட்டார். பூமியின் மீது அவர் வேலைக்காரர்களிலேயே தாழ்ந்தவராக இருந்தார்; பரலோகத்தில், அவர் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக் கொண்டுள்ளார்!

இயேசுவைத் தேவன் உயர்த்தியிருப்பதால், அவர் எல்லா படைப்புகளாலும் மகிழ்வுடன் பாராட்டப்பட வேண்டும்: "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும்" (வசனம் 10, 11அ). இயேசுவின் நாமத்திற்கு முழங்கால் முடங்குதல் என்பது அவரை ஆராதித்தலாக உள்ளது (காண்க எபேசியர் 3:14). இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடுதல் என்பது, அவர் எல்லாவற்றையும் ஆள்கிறவர் என்று வெளிப்படையாகவும் நேர்மையாகவும் ஒப்புக்கொள்ளுதலாக உள்ளது. "பூமியின் கீழானோர்" என்ற சொல்விளக்கமானது, அனேகமாக, "மரித்தோர்" என்று அர்த்தப்படலாம்

*(காண்க ரோமர் 14:9). "வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர்" என்ற முப்பரிமாணப் பட்டியல், இயேசுவின் கர்த்தத்துவம் "வானவெளிக்கும் அண்டத்திற்கும்"[23] பரந்திருப்பதால், எங்குமுள்ள ஒவ்வொருவரும் அவரை அறிக்கையிட வேண்டும் என்று கூறுவதற்கான தனிச்சிறந்த வழியாக உள்ளது. இன்றைய நாட்களில் பலர் அதைச் செய்ய மறுக்கின்றனர், ஆனால் "நிறைவாக எல்லாரும் ... மனவிருப்பத்துடனோ அல்லது விருப்பம் இன்றியோ, அவரைக் கர்த்தர் என்று ஒப்புக்கொள்வார்கள்."[24]*

*இவையாவும் "தேவனுக்கு மகிமையாக" இருக்கும் என்று இவ்வசனப் பகுதி கூறுகிறது (வசனம் 11அ). "தேவனுக்கு மகிமை என்பதே எல்லா விஷயங்களின் நிறைவு நோக்கமாக உள்ளது."[25] கிறிஸ்து மகிமைப்படும்போது, தேவனும் மகிமைப்படுகிறார் என்பதால் இது இவ்வாறு இருக்கும். மற்றும், பெறுதல் அல்ல ஆனால் கொடுத்தல் என்பதே தேவனுடைய உண்மையான இயல்பாக உள்ளது என்று காண்பித்த இயேசுவின் தெய்வீக உதாரணத்தினால் தேவன் மகிமைப்படுகிறார்.*

## ஊக்குவித்தல்

*9முதல் 11ம் வசனங்கள் வரையிலான பகுதியில், பிலிப்பியர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அல்லது பாடங்கள் என்ன? இயேசு கர்த்தராக இருக்கிறார் என்ற உண்மையானது, அவரது உதாரணத்தை அவர்கள் பின்பற்றுவதற்கு, வல்லமைநிறைந்த காரணமாக இருந்திருக்க வேண்டும். இவ்வசனங்களில் இன்னொரு ஊக்குவிப்பும் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது என்று நான் நம்புகிறேன்: "இயேசு தம்மையே தாழ்த்திய பின்பு உயர்த்தப்பட்டார் என்பதால், அவர் செய்தது போல நீங்கள் உங்களைத் தாழ்த்தி மற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்தீர்கள் என்றால், முடிவில் நீங்களும் உயர்த்தப்படுவீர்கள்!" ஃபிரெட் கிரெடாக் என்பவர் பின்வரும் சுருக்கமான தொகுப்புரையைக் கொடுத்தார்: "இப்போது கடைசி, பிற்பாடு முதல்!"[26] சிலர் இப்படிப்பட்ட நோக்கத்தின் "உறுதியற்றதன்மை பற்றி" குறைகூறி, இவ்விதமான முடிவை மறுக்கின்றனர் [அதாவது, ஒருவர் தாம் உயர்த்தப்படுவதற்காகவே தம்மைத் தாழ்த்த முடியுமே என்று இவர்கள் நினைக்கின்றனர்] இருப்பினும், தாழ்த்தப்படுதலைத் தொடர்ந்து உயர்த்தப்படுதல் வரும் என்ற குறிப்பான வாக்குத்தத்ததுடன் (காண்க மத்தேயு 23:12; லூக்கா 14:11; 18:14; 1 பேதுரு 5:6) வெகுமதியின் கருத்து வேதவசனங்களில் அடிக்கடி காணப்படுகிறது (காண்க மத்தேயு 25:21).*

*வாழ்வினூடே நாம் கடந்து செல்லுகையில், பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ளுகையில், மற்றும் முடிவுகளை நாம் ஏற்படுத்துகையில், நாம் எப்போதுமே "நி காரணியை" ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று கர்த்தர் நம்மிடத்தில் விரும்புகிறார். "நி காரணி" என்றால் என்ன? அது <u>நித்தியத்துவ</u> காரணியாக உள்ளது. இந்த வாழ்வு குறுகியதாகவும் நிச்சயமற்றதாகவும் உள்ளது (யோபு 14:1; யாக்கோபு 4:14). தெரிவுகளுடன் போராடுவதில் நாம், "<u>நித்தியத்தில்</u> இதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?" என்று நம்மையே கேட்டுக் கொள்ள வேண்டும்.*

*"கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தை"யை நாம் கொண்டிருக்க நீங்களும் நானும் நம்மால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டியது*

*ஏன்? நாம் நமது கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்காக, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நம்மால் இயன்றபடி எல்லாம் இருப்பதற்காக, மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் சமாதானத்தையும் இசைவிணக்கத்தையும் மேம்படுத்துவதற்காக நாம் அவ்வாறு செய்ய வேண்டும். அதே வேளையில், நாம் நம்மைத் தாழ்த்தினால், ஒரு நாளிலே நாமும் உயர்த்தப்படுவோம் என்பதை உணர்ந்தறிவது எவ்வளவு ஆச்சரியமாக உள்ளது!*

## முடிவுரை

*பிலிப்பியர் 2:5-11ம் வசனப் பகுதி நமது வாழ்வில் - அதை நாம் அனுமதித்தால் - வல்லமை நிறைந்த செயல்தாக்கம் ஒன்றைக் கொண்டிருக்க முடியும். யாரோ ஒருவர் இவ்வசனங்களை, சூரியனின் சக்தி நிறைந்த கதிர்களுக்கு ஒப்பிட்டிருக்கிறார்.[27] சூரியன் நமது வாழ்வை ஆசீர்வதிக்கக் கூடும், அல்லது நாம் ஒரு மூடப்பட்ட இருளானஅறைக்குள் அதிலிருந்து [சூரியனில் இருந்து] நம்மை ஒளித்துக் கொண்டிருக்கக் கூடும். சூரியன்அப்போதும் அங்கிருக்கும், ஆனால் நாம் இருளையும் குளிரையும் மாத்திரமே அறிந்து இருப்போம். நீங்கள் பிலிப்பியர் 2:5-11ன் ஆச்சரியமான சத்தியங்களைப் புறக்கணியாமல் அவற்றைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன். அவைகள் உங்கள் வாழ்வை மாற்றக்கூடும்.*

## குறிப்பு

*இந்த எடுத்துரைப்பை நீங்கள் பயன்படுத்தும்போது, கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதற்கு அழைப்பை நீங்கள் விரிவாக்க விரும்பலாம். நீங்கள் பின்வருவது போன்று சிலவற்றைக் கூற, விரும்பலாம்: "ஒருநாளிலே, இயேசு கிறிஸ்துவின் முன்பாக ஒவ்வொரு முழங்காலும் முடங்கும்; பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று 'ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும்' (பிலிப்பியர் 2:10, 11). நீங்கள் அவரை உங்கள் கர்த்தர் என்றும் உங்கள் எஜமானர் என்றும் அறிக்கையிட்டு இருக்கிறீர்களா (ரோமர் 10:9, 10)? அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருத்தலினால் நீங்கள் அவருடைய கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா (நடபடிகள் 2:38)? இந்த வாழ்வில் அவரை அறிக்கை செய்திராதவர்கள், இனிவரவிருக்கும் வாழ்வில் அவரை அறிக்கை செய்வார்கள், ஆனால் அப்போது அது மிகவும் தாமதமானதாயிருக்கும். நீங்கள் இந்தப் பாடத்தைக் கவனமாய் ஆழ்ந்து சிந்தித்து இருந்தீர்கள் என்றால், நிச்சயமாகவே நீங்கள் உங்கள் வாழ்வை, பரலோகத்தை விட்டுப் பூமிக்கு இறங்கி வந்து உங்களுக்காக மரித்த அவருக்கு ஒப்புக்கொடுப்பீர்கள் என்பது நிச்சயம். நீங்கள் இப்போது அகமகிழ்வுடன் அவரை அறிக்கை செய்ய முடியும் - அல்லது பிற்பாடு அதை நீங்கள் பெருவருத்தத்துடன் செய்ய வேண்டியிருக்கும். தேர்வு உங்களுடையது!"*

*ஒரு காலத்தில் இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றிருந்து, ஆனால் தாங்கள் ஏற்படுத்திய அறிக்கைக்குச் சீர்பொருத்தமான வகையில் வாழ்ந்திராத எவரையும் கூட நீங்கள் உள்ளடக்க விரும்பலாம். அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படும்படி வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுங்கள் (கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).*

குறிப்புகள்

[1]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature* (Chicago: University of Chicago Press, 1957), 874. [2]Fred B. Craddock, *Philippians,* Interpretation series (Atlanta: John Knox Press, 1985), 38. [3]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary*, vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 76, 79. [4]A. B. Bruce, *The Humiliation of Christ* (Edinburgh: T. & T. Clark, 1900), 11. [5]இவ்வார்த்தைகள் மீதான படிப்பிற்கு பின்வரும் புத்தகம் ஒரு ஆதாரமூலமாக உள்ளது: William Hendriksen, *New Testament Commentary: Exposition of Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1962), 104. [6]Richard B. Gaffin, Jr., notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publi shing House, 1985), 1805. [7]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 52. [8]Ibid. [9]J. B. Lightfoot, *The Epistle of St. Paul III: The First Roman Captivity I: Epistle to the Philippians* (London: MacMillan and Co., 1913), 134-35. [10]Paul Rees, *The Epistle to the Colossians, Philippians and Philemon* (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 44.

[11]Lightfoot, 45. [12]Arndt and Gingrich, 157. [13]Manford George Gutzke, *Plain Talk on Philippians* (Grand Rapids, Mich.: Lamplighter Books, Zondervan Publishing House, 1973), 89. [14]J. G. Dailey, "Why Did My Savior Come to Earth?" *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [15]F. F. Bruce, *Philippians,* Good News Commentaries series (San Francisco, Calif.: Harper & Row Publishers, 1983), 47. [16]Hawthorne, 90. [17]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 4, *The Epistles of Paul* (Nashville: Broadman Press, 1931), 445. [18]I-Jin Loh and Eugene A. Nida, *A Translator's Handbook on Paul's Letter to the Philippians* (New York: United Bible Societies, 1977), 55. [19]J. H. Jowett, quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 75. [20]Theodore Monod, "None of Self and All of Thee," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

[21]I sometimes add here, "Jesus graduated from the College of Humiliation *summa cum laude,* 'with highest honors.' " [22]F. F. Bruce, 48, 50; Robertson, 446; Loh and Nida, 63. These writers and others make persuasive arguments for the title "Lord." [23]Loh and Nida, 62. [24]Gaffin, 1805. [25]Hendriksen, 118. [26]Craddock, 42. [27]Gutzke, 96.